தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஜய, ஆடி 27, திருவள்ளுவர் ஆண்டு — 2045

2014 ஆகஸ்ட் 12, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்."

நீதி நெறிமுறைகள் தவறாமல் குடிமக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளரை மக்கள் ஒப்பற்ற தெய்வம் என்று மதித்துப் போற்றுவார்கள்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 405, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

405—

சூரிய ஒளி மின் உற்பத்தி

***42384—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், கேத்தனூர் கிராம ஊராட்சியிலுள்ள தமிழ்நாடு மின்சார

வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் சூரிய சக்தியின் மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், கேத்தனூர் கிராம ஊராட்சியில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமான நிலம் ஏதுமில்லை. ஆனால், அந்த இடம் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை-*TEDA *நிறுவனத்திற்குச் சொந்தமானது. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமில்லை. எனவே, கேத்தனூர் கிராம ஊராட்சியில் சூரிய சக்திமூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.*

திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனக்காகவோ, தன்னுடைய குடும்பத்திற்காகவோ, தன்னுடைய வாரிசுகளுக்காகவோ அல்லாமல், தமிழகத்தில் வாழ்கின்ற 8 கோடி தமிழ் மக்களின் நெஞ்சங்களில் மட்டுமல்லாமல், உலகம் முழுவதும் வாழும் அனைத்துத் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் குடிகொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் தொகுதி, கணபதிபாளையம் ஊராட்சியில் 239 K.V.A. *துணை மின் நிலையம் 19 ஏக்கர் பரப்பளவில் செயல்பட்டு வருகிறது. அங்கே மீதமுள்ள இடத்தில் 110* K.V. *துணை மின் நிலையம் அமைத்துக் கொடுத்தால், சூரிய சக்திமூலம் மின்சாரம் உற்பத்தி செய்ய அப்பகுதிவாழ் தொழிலதிபர்களும், தொழில் முனைவோரும் தயாராகவுள்ளார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகப் பணிவுடன் கேட்டு அமர்கிறேன்.*

2014 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமான இடம் அங்கேயிருக்கிறது; அங்கே சூரிய சக்திமூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுமா என்று கேட்டார். ஆனால், அந்த இடம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமானதல்ல. மாறாக, அந்த இடம் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை-Tamil Nadu Energy Development Agency என்று சொல்லக்கூடிய TEDA நிறுவனத்திற்குச் சொந்தமானது. அது ஏறத்தாழ 92.255 ஏக்கர் பரப்பளவுள்ள நிலமாகும். மத்திய அரசின் உதவியோடு முதன்முதலாகக் காற்றாலை மின் உற்பத்தியைத் தமிழகத்திலே அறிமுகப்படுத்தியபோது, அங்கே Demonstration Wind Farm என்று சொல்லக்கூடிய காற்றாலை மாதிரி மின் பண்ணை செயல்பட்டு வந்தது. தற்பொழுது 20 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. அந்தக் காற்றாலை மாதிரி மின் பண்ணையின் செயல்பாடு தற்பொழுது நிறுத்தப்பட்டுவிட்டது. ஆகவே, அந்த இடம் தற்பொழுது எந்தப் பயன்பாடும் இல்லாமல் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல யோசனையைச் சொல்லியிருக்கிறார். அந்த இடத்திலே சோலார் எனர்ஜி-சூரிய சக்திமூலம் மின் உற்பத்தி செய்யப்படுமா என்று கேட்டிருக்கிறார். தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையோடு சேர்ந்தோ அல்லது ஏதாவது ஓர் அரசு கூட்டு நிறுவனத்தோடு இணைந்தோ, தனியாருடன் இணைந்தோ அந்த இடத்திலே சூரிய சக்திமூலம் மின் உற்பத்தியைச் செய்வதற்கு யாராவது முன்வந்தால், அது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, அனுமதி பெற்று, உரிய நடவடிக்கைகள் எடுப்பது குறித்து அரசு சிந்திக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-05

அடுத்தபடியாக, அவர் குறிப்பிட்ட அந்தப் பகுதியின் அருகிலே 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் ஒன்று அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அந்தப் பகுதியில் இருக்கின்ற மின் பளுவின் தேவையைக் கருத்தில் கொண்டு, தேவை ஏற்படின், அந்தப் பகுதியில் 110/11 அல்லது ஒரு 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கப்படும். அப்பகுதியின் மின் பளு தேவைக்கேற்ப

எந்தத் துணை மின் நிலையமாக இருந்தாலும் உரிய ஆய்வுகளை மேற்கொண்டு, நிதி நிலைக்கேற்ப, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிவுடன் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 406, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

406—

வீடுகள்

***35977—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*

திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தில் வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம் உள்ளிட்ட 4 பேரூராட்சிகள், 10-க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகள், பல்வேறு அரசு அலுவலகங்கள்*